**தலைப்பு 226 – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம் என்பதனால்,

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதாதபோதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு தொடர்பாக உணரப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டினது நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானங்களின் பெறுவனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு தூதரகங்களில் கடவுச்சீட்டுகள் தொடர்பில் மொத்த வருமானத்தினை கணனி கட்டமைப்பில் சரியான முறையில் நாளதுவரையாக்காததுடன் அந்த வருமானம் நீங்கலாக காசுப் புத்தகத்தின் பிரகாரம் பிரயாண அனுமதிப்பத்திர இலக்கத்தின் மொத்த வருமானத்தை மற்றும் திணைக்களத்தின் ஒட்டுமொத்த வருமான அறிக்கையுடன் ஒப்பிடும் போது 05 மாதங்களின் கூட்டுத் தொகையில் ரூபா 1,051,200 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | செலுத்துபவருக்கு நேரடியாக வங்கிக்கு செலுத்தப்படும் கட்டணம் கணனி மயப்படுத்தப்பட்ட வருமானத்திற்கு சேர்க்கப்படாது வங்கி பொழிப்புக்களின் மூலம் திணைக்களத்தின் கணக்குகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'பீ' கணக்கு இணக்கக் கூற்றின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் பெற வேண்டிய மீதி ரூபா 162,416,726 ஆன போதிலும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த மீதி ரூபா 161,935,932 ஆனமையால் பெற வேண்டிய மீதி ரூபா 480,794 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது இந்த வேறுபாடு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அறிக்கையிடப்பட்ட போதிலும் இதுவரையிலும் திருத்துவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேறுபாடு 2018 ஆம் ஆண்டிற்கு முன்னைய சில வருடங்களாக நிலவுவதுடன் இந்த வேறுபாட்டிற்கு காரணமாவது காரணத்தினை பழைய அறிக்கைகளை பரிசோதித்து வெளிப்படுத்தி திருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 8.1 பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் கணனி பதிவேட்டின் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப | CIGAS கணனி மென்பொருளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் தேவையான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் கணினிப் பதிவேட்டினை தயாரித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகள் மற்றும் ஆண்டினிலான கொள்வனவுகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 404,759,071 ஆன போதிலும் மேற்படி கணனி கட்டமைப்பில் அந்த பெறுமதியானது ரூபா 405,030,372 ஆனமையால் ரூபா 271,301 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ரூபா 271,301 ஆன நுகர்வுப் பொருட்களின் அளவானது தவறுதலாக கணனி மென்பொருளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட இயந்திர உபகரணங்களின் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த மை. | வேறுபாட்டினை இனங்காணல் மற்றும் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல். |
| (இ) | கட்டிடங்கள் நிர்மாண இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரண இயந்திரங்கள் மற்றும் ஏனைய நிதியல்லாத சொத்துக்களின் திறைசேரி அச்சீட்டு பதிவின் மீதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 94,656,090 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரியால் திணைக்களத்தின் கணக்கு பொழிப்பின் மூலம் அறிக்கையிடப்படாத பெறுமதிகளை செலவு வைத்தல். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து திருத்துதல். |

### 1.6.4 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தினால் நட்டங்கள் மற்றும் இழப்புக்களிற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் இழப்புக்களிற்கான பதிவேட்டினை எதிர்காலத்தில் பேணுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேட்டினை பேணுதல். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 316,922 ஆன தீர்க்கப்படாத உப கட்டுநிதி மீதியொன்று கணக்குகளில் காணப்பட்டதுடன் திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் அந்த பெறுமதியானது ரூபா 366,133 ஆகும். | 2021 ஆம் ஆண்டின் போது திறைசேரி புத்தகங்களில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து திருத்துதல். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மூல வருமான மதிப்பீடு ரூபா 19,615,000,000 ஆக காணப்பட்டதுடன், திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 8,000,0000,000 ஆகும். உள்ளபடியான வருமானம் ரூபா 5,532,660,511 அல்லது திருத்திய வருமானத்தின் 69 சதவீதம் ஆகும். அதன் பிரகாரம் திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு ரூபா 2,467,339,489 அல்லது 31 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்தமை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத்தால் பயண சீட்டுக்கள், இரட்டை குடியுரிமை மற்றும் கடவுச்சீட்டு வருமானங்கள் குறைவடைந்தமை. | வருமானத்தைச் சரியாக மதிப்பீடு செயதல். |

**2.3 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமான அளவில் முழுமையானதும் சரியானதுமான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிராத காரணத்தால் நிதிப் பிரமாணம் 66 இன் மாற்றல்கள் மூலம் 04 சந்தர்ப்பங்களில் ஆரம்ப மதிப்பீடு 55 சதவீதம் முதல் 346 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டிருந்தது. | அத்தியாவசியமான செலவினங்களுக்கு நிபந்தனைகளின் கீழ் செலவின விடயங்களுக்கு இடையிலேயே நிதிஏற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளது. | தேவையை இனங்கண்டு சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் 5 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டின் 82 சதவீதம் அந்த வருடத்தின் இறுதி மாதத்தில் செலவிடப்பட்டிருந்ததுடன் முதல் 11 மாதங்களிலும் செலவிடப்பட்டிருந்த அளவானது தேறிய நிதி ஏற்பாட்டின் 18 சதவீதம் மாத்திரம் ஆகும். | மூலதன செலவினத்துடனான செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நேர்ந்தது ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆகும். | முன்கூட்டியே நிதி ஏற்பாட்டினை செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 2.4 பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் உட்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டிற்குரிய 2021 மார்ச் வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,035,178 ஆன பொறுப்புக்கள் திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பொறுப்புக்கள் உரிய முறையில் இனங்காணப் படாமையால் ஏற்பட்டுள்ள நிலைமையை சீராக்குவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து பொறுப்புக்களும் உரிய பதிவேட்டில் உள்ளடக்குதல். |
| (ஆ) 5 செலவின விடயங்களின் 2021 செலவின பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களின் பெறுமதி மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 4,649,937 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் 9 செலவின விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பொறுப்புக்களின் பெறுமதி மற்றும் உறுதிச்சீட்டுக்களின் பிரகாரமான பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 10,427,218 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பொறுப்புக்களை சரியாக இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்களை சரியாக இனங்காணுதல். |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| அவதானிப்புகள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணத்துடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மைகள் | | |
| 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | 96,190,676 | 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமை. | CIGAS கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உரிய சந்தர்ப்பங்கிளல் பதிவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

**2.6 வங்கிக் கணக்குகளை மேவுகை செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக் கணக்கில் 700 டொலர் வெளிப்படுத்தப்படாத பெறுவனவுகள் காணப்பட்டதுடன் ஆண்டின இறுதியில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் விமான நிலையத்தில் சிறாப்பருக்கு டொலர் மூலமான கொடுக்கல் வாங்கல்களுக்காக வழங்கப்பட்டுள்ள உப கட்டுநிதியாகும். | உரிய முறையில் கணக்கீட்டு தரவுகளை பேணுதல் மற்றும் கணக்காய்விற்கு சரியான தகவல்களை சமர்ப்பித்தல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டில் இலக்கம் 12 இன் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வருமான சேகரிப்புத் திட்டம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் சேகரிக்கும் திட்டம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படல் |

### 3.2 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ‘‘பயண அனுமதிப்பத்திர ஸ்டிக்கர்’’ கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த பணி ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கொவிட் தொற்றுநோய் காரணமாக ‘‘பயண அனுமதிப்பத்திர ஸ்டிக்கர்’’ கொள்வனவு செய்வதற்கான தேவைப்பாடு ஏற்படவில்லை. | சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் செயற்நடவடிக்கை திட்டத்தினை மாற்றியமைப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 ஏனைய அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செலவின பேரேட்டின் குறிப்புகளின் மூலம் மற்றும் மிகை அறவீட்டினை கணக்கு வைத்தல் தெளிவாக இனங்காண முடியாதிருந்ததுடன் திறைசேரியின் அச்சீட்டு பதிவுகளினுள் மிகை அறிவீடாக பதிவு செய்யப்பட்ட பெறுமதி மற்றும் செலவினப் பேரேட்டினுள் மிகை அறவீடாக பதிவு செய்யப்பட்ட பெறுமதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | செலவின பேரேடு பெயரளவிலேயே பராமரிக்கப்படுகின்றது. அதனை இயலுமான அளவில் சரியாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை அறவீட்டினை சரியாக கணக்கு வைத்தல். |

## 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 13 இன் மாதிரிக்கமைய திணைக்களத்தின் பிரதான பெறுகைகள் திட்டத்திற்கு பெறுகைகள் ஆரம்பிக்கப்படும் தினங்கள் குறிப்பிடப்பட்டிராததுடன் விரிவான பெறுகைகள் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டத்தினை தயாரித்தல். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வெளிநாட்டு தூதரகங்கள் பிரிவினால் பயணச் சீட்டுக்களை வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் செயற்பாட்டு கையேடு ஒன்று திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதன் 8 மற்றும் 9 ஆம் பிரிவகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிறப்புச் சான்றிதழின் மற்றும் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதிகள் மற்றும் பயணச் சீட்டுக்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறான போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 50 பயணச் சீட்டுக்களில் 12 பயணச் சீட்டுக்கள் அந்த பயண அனுமதிச்சீட்டுக்குரிய நிழற்பட பிரதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே பணம் செலுத்தம் போது பற்றுச்சீட்டின் நிழற் பட பிரதியொன்றும் குறித்த விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டிராததுடன் கணனிமயப்படுத்தப்பட்ட | முன்னைய கடவுச்சீட்டின் நிழற்பட பிரதிகள் மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கடவுச்சீட்டு வழங்கப்படும். | உரிய உள்ளக கட்டுப்பாட்டு பிரமாணங்கள் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப் படல். |

| | | | |
|---|---|---|---|
| | தரவுகளிலும் அது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | திணைக்களத்தில் சேவையாற்றி மரணமடைந்த, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் ஓய்வூதியம் பெற்ற உத்தியோகத்தர்களின் 5 வருடத்தற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 54,757, ரூபா 72,496 மற்றும் ரூபா 23,228 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | இந்த மீதிகள் ஓய்வூதிய பணிக்கொடையில் மற்றும் தனிப்பட்ட பணத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கடன் மீதிகளை செயற்திறனான முறையில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1292 மற்றும் உள்ளபடியான பதவியணி 1040 ஆக காணப்பட்டதுடன் வெற்றிடமான மற்றும் மிகை பதவியணி முறையே 253 மற்றும் 01 ஆகும். | 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதியில் உள்ளபடியான 272 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகையான இரு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் காணப்பட்டனர். | பதவியணி நிர்வாகத்தினை முறைமைப் படுத்துதல். |